# காஞ்சிபுரத்தில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேச்சு!

9 ஆம் பக்கத் தொடர்ச்சி

பொதுமக்கள் கேட்கும் கேள்வி என்னவென்றால். ஒரு கேமரா திரும்பி இருந்ததற்கே மருத்துவமனைகளின் அங்கீகாரத்தை ரத்துசெய்யும் நீங்கள். மருத்துவமனை கட்டாமலேயே ஆண்டிற்கு 50 மாணவர்களை மருத்துவம் படிக்க தமிழ்நாட்டிற்கு அனுப்புகிறீர்களே? உங்களை என்.எம்.சி. அங்கீகாரத்தையார் ரத்து செய்வது? என்று கேட்கிறார்கள்.

சென்னை. காஞ்சிபுரம். திருவள்ளூர் மாவட்டங்களில் பெருவெள்ளம். 47 ஆண்டுகளுக்குப் பிறகு 2023 ஆம் ஆண்டு டிச.5. 6 ஆகிய இரண்டு நாட்கள் பெய்த மழை. இதற்கு முன்பு.147 ஆண்டுகளுக்கு முன்பு பெய்த மழையின் அளவுக்குச் சமம். பட்டினப்பாக்கம் 50 சென்டிமீட்டர். நுங்கம்பாக்கத்தில் 53 சென்டிமீட்டர் கொட்டித் தீர்த்துள்ளது. என 20 சென்டிமீட்டர் மழை பெய்தாலே தாங்காது. 24 மணிநேரத்தில் 53 சென்டிமீட்டர் மழை பெய்துள்ளது. அவ்வளவு பெரிய பாதிப்பு ஏற்பட்டது.

**வெள்ளப் பாதிப்பு நிவாரண நிதி!**

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இந்த வெள்ளப் பாதிப்பிற்கு ரூ.19,692 கோடி நிவாரணம் வேண்டுமென்று ஒன்றிய அரசிற்கு கடிதம் எழுதினார். ஒன்றிய அரசின் நிர்வாகிகள் வந்து ஆய்வுசெய்துவிட்டு சென்றுவிட்டார்கள். இன்னும் ஒரு ரூபாய் கூட கொடுக்கவில்லை. அதே போல் கன்னியாகுமரி. தூத்துக்குடி. திருநெல்வேலி, தென்காசி நான்கு மாவட்டங்களிலும் பெரிய அளவிலான வெள்ளபாதிப்பு. அதே மாதத்தில். அங்கேயும் மிகப்பெரிய அளவிலான பாதிப்பு. ஏரல் என்கிற ஊரே இல்லாமல் போய்விட்டது அந்த மழை பாதிப்பில். அந்த வெள்ள பாதிப்புக்கு நிவாரணம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ரூ.18,214 கோடி ரூபாய் வேண்டுமென்று கேட்டார்கள். இதுவரை ரூ.37,906 கோடி ரூபாய் நிவாரணம் வேண்டுமென்று கேட்டார்கள். ஆனால் இதுவரை டெல்லி மோடி அரசு ஒரு ரூபாய்கூட தரவில்லை.

ஆனால் தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் வெள்ளப் பாதிப்புக்குள்ளானவர்களுக்கு ரூபாய் ஆயிரம் நிவாரணம் வழங்கினார்கள். அதேபோல் கன்னியாகுமரி, தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி ஆகிய மாவட்டங்களில் மிதமான பாதிப்புக்குள்ளானவர்களுக்கும் வீட்டிற்கு ரூ.1000 வழங்கினார்கள். விடுபட்டவர்கள் விண்ணப்பித்தால் அவர்களுக்கும் வழங்கப்படும் என்று அறிவித்து. விடுபட்டவர்களுக்கு மணிஆர்டர் மூலம் கடந்த மார்ச் 1 அன்று ரூ.1000 வழங்கப்பட்டுள்ளது. ஒன்றிய அரசு நிதி வழங்காமலேயே தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டு மக்களின் துயர் துடைத்துள்ளார்கள்.

**ஒன்றிய அரசு செய்ய மறந்த திட்டங்கள்!**

மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர் அவர்கள் மாநில அரசின் திட்டங்களையெல்லாம் சாதனைகளையெல்லாம் இங்கே எழுதி வைத்திருக்கிறார்கள். இந்தத் திட்டங்கள் எல்லாம் ஒன்றிய அரசு செய்ய மறந்த திட்டங்கள். அந்த மறந்த திட்டங்கள் எல்லாம் இங்கே வரவேண்டுமென்றால் என்ன செய்யவேண்டும் நீங்கள்? வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காஞ்சிபுரம் நாடாளுமன்றத் தொகுதியில் யாரை அறிவிக்கிறாரோ, அவர்களை வெற்றிபெற செய்ய வேண்டும். அதுவும் இலட்சக்கணக்கான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெற வைக்க வேண்டும்.

2019ஆம் ஆண்டு தமிழ்நாட்டின் முதலமைச்சர் தளபதி அவர்கள் சீரிய தலைமையில் நடைபெற்ற அந்தத் தேர்தலில் திருப்பெரும்புதூரிலும், திண்டுக்கல்லிலும் 5 லட்சத்திற்கும் மேற்பட்ட வாக்குகள் வித்தியாசத்தில் மகத்தான வெற்றியைப் பெற்றோம். 4 லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் சென்னை வடக்கு, திருச்சி, கரூர், பெரம்பலூர் ஆகிய நான்குத் தொகுதிகளைப் பெற்றிருந்தோம். 3 லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் 8 தொகுதிகள், 2 லட்சத்திற்கும் மேற்பட்ட வாக்குகள் வித்தியாசம் 9 தொகுதிகள், ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட வாக்குகள் வித்தியாசம் 11 தொகுதிகள், ஒரு லட்சத்திற்கும் கீழான வாக்குகள் வித்தியாசம் 5 தொகுதிகள். இப்படி 39 தொகுதிகளிலும், ஒரு தொகுதியைத் தவிர மகத்தான வாக்குகள் வித்தியாசத்தில் மகத்தான வெற்றியைப் பெற்றது. இந்த மாதிரியான வெற்றி இதற்கு முன்னால் எப்போதும் நாம் பெற்றதில்லை. இந்த வெற்றி என்பது தமிழ்நாட்டின் முதலமைச்சர் தளபதி அவர்களுக்குக் கிடைத்த வெற்றி.

இப்போது மக்களிடையே ஏற்பட்டிருக்கிற எழுச்சி. வரும் நாடாளுமன்றத் தேர்தலில் எல்லாத் தொகுதியில் 5 லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி என்னும் கின்னஸ் சாதனை படைக்க இருக்கிறது தமிழ்நாடு. இதன்மூலம் எந்தக் காட்சியாக இருந்தாலும் கட்டும் தொகையை (டெபாசிட்) இழக்கும் நிலைமை வர இருக்கிற தேர்தல்களில் நடக்க இருக்கிறது. எல்லோரையும் டெபாசிட் இழக்க வைக்கிற திட்டங்களைத்தான் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஏற்படுத்த இருக்கிறார்.

ரூ.13,720 கோடி செலவில் 1,15,16,292 மகளிர் மாதந்தோறும் ரூபாய் ஆயிரம் பெறும் மகத்தான மகளிர் உரிமைத் தொகைத் திட்டம் சாதனைப் படைத்திருக்கிறது. வேறெந்த நாட்டிலும் இல்லாத திட்டம். இது தான் திராவிட மாடல். பட்ஜெட் அறிவிப்பிற்கு முன்னர் நகரப் பேருந்துகளில் மட்டும் 445 கோடி இலவச பயணங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஒரு நாளைக்கு 50 லட்சம் பயணங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டம் அறிவிப்பதற்கு முன்பு வரைப் பொதுப்போக்குவரத்து பயன்படுத்துவோரின் சதவிகிதம் 40 ஆக இருந்தது. மகளிருக்கு விடியல் பயணம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்த பிறகு பொதுபோக்குவரத்து பயணம் மேற்கொள்வோர் 65 சதவிகிதமாக உயர்ந்துள்ளது மகிழ்ச்சியளிக்கக்கூடியது என்று ஏற்கெனவே இத்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதி ரூ.2050 கோடியிலிருந்து இப்போது ரூ.3050 கோடியாக உயர்த்தப்பட்டு, ஊட்டி, கொடைக்கானல், வால்பாறை போன்ற மலைவாழ் பகுதியில் வசிக்கும் மகளிர் இலவசப் பயணம் மேற்கொள்ள முதலமைச்சர் அவர்கள் திட்டத்தை நிறைவேற்றி இருக்கிறார். இது தான் எல்லோருக்கும் எல்லாம்.

**தமிழ்ப் புதல்வன் திட்டம்!**

புதுமைப் பெண் திட்டத்தின் மூலம் 6ஆம் வகுப்பு முதல் 12 வகுப்பு வரை அரசுப் பள்ளிகளில் பயின்று, பி.ஏ., பி.காம்., இளங்கலைப் படிக்கும் அரசு மாணவிகளுக்கு மாதந்தோறும் ரூ.1000 உதவித் தொகை அது 3 ஆண்டுகளில் ரூ.36 ஆயிரமும், பி.இ., பி.டெக்.,பொறியியல் பயிலும் மாணவிகளுக்கு 4 ஆண்டுகளில் 48 ஆயிரமும், எம்.பி.பி.எஸ்., மருத்துவம் படிக்கும் மாணவிகளுக்கு 5 ஆண்டுகளில்60 ஆயிரமும், டிப்ளமோ தொழிற்கல்வி படிப்பவர்களுக்கு 24 ஆயிரமும் உதவித்தொகையாக வழங்கப்படுகிறது. கடந்த இரண்டு ஆண்டுகளில் 4,81,075 மாணவிகள் மாதந்தோறும் ரூ.1000 உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது. இப்போது அரசு உதவிப்பெறும் பள்ளிகளில், கிறிஸ்த்துவ, மற்றும் இசுலாமியப் பள்ளிகளில் பயிலும் மாணவிகளுக்கும் மாதந்தோறும் ரூ.1000 வழங்குவதற்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறாரே, இதுதான் எல்லோருக்கும் எல்லாம். இதுவரை மாணவிகள் தான் மாதந்தோறும் உதவித் தொகைப் பெற்று வந்தார்கள். இப்போது மாணவர்களுக்கும் 'தமிழ்ப்புதல்வன் திட்டம்' தொடங்கப்பட்டு, மாணவர்களுக்கும் மாதந்தோறும் ரூ.1000 வழங்கப்பட இருக்கிறது. இதுதான் 'எல்லோருக்கும் எல்லாம்'.

இப்போது ஒரு திட்டம். காலை உணவுத் திட்டம். இந்தத் திட்டத்திற்கு ஒரே உரிமையாளர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்கள் மட்டும்தான். இத்திட்டம் தொடங்கும் போது தமிழ்நாடு முதலமைச்சர் முதல்வர் அவர்கள் 16 லட்சம் மாணவர்கள் பயனடைகிற வகையில், 31,008 தொடக்கப் பள்ளிகளில் ஆண்டுக்கு ரூ.404 கோடி ரூபாய் நிதியை ஒதுக்கினார். தமிழ்நாடு முழுவதும் பள்ளிகளில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டிருக்கிறது.

ஆனால் இந்த நிதிநிலை அறிவிப்பிற்குப் பிறகு அரசு உதவிப் பெறும் பள்ளிகளில் கிறிஸ்த்துவ, மற்றும் இசுலாமியப் பயிலும் மாணவர்களுக்கும் காலை உணவுத் திட்டத்திற்காகரூ.600 கோடி ரூபாய் நிதியை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஒதுக்கி இருக்கிறார் அல்லவா? இதுதான் 'எல்லோருக்கும் எல்லாம்'. 'எல்லோருக்கும் எல்லாம்' என்கிற வகையில் தமிழ்நாட்டில் அனைத்துத்தரப்பு மக்களும், சிறுவர் முதல் குடுகுடு கிளவர் வரை பயனடைகிற இந்த அரசினை நடத்துகிற பிறந்தநாள் விழா நாயகர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பல்லாண்டு வாழ்க என வாழ்த்தி விடைபெறுகிறேன்.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் உரையாற்றினார்.



சென்னை தெற்கு மாவட்டம் சைதை மேற்கு பகுதி திமுக சார்பில் பகுதி கழகசெயலாளரும் பத்தாவது மண்டலகுழு தலைவர் எம்.கிருஷ்ணமூர்த்தி எம்.சி., தலைமையிலும் சைதை கிழக்கு பகுதி செயலாளர் இரா.துரைராஜ் எம்.சி., பொதுக்குழு உறுப்பினர்கள் சைதை மா.அன்பரசன், வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன் எம்.சி., முன்னிலையிலும் பகுதி கழக நிர்வாகிகள் களக்காடிஎல்லப்பன், த.சம்பத், ஆர்.ரமேஷ், கவிதாகௌதமன், வி.பி.ஜானகிராமன் வரவேற்பில் கழக தலைவர் தமிழக முதல்வரின் 71வது பிறந்தநாளை முன்னிட்டு சைதாப்பேட்டை தேரடி திடலில் வாழ்த்தரங்கம் நடைபெற்றது. வாழ்த்தரங்கத்தை மாவட்ட கழக செயலாளரும் மருத்துவம் மற்றும் மக்கள்நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடங்கிவைத்தார். திராவிட மாடல் – தேசத்தின் விடியல் என்ற தலைப்பில் கழக கொள்கை பரப்பு செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினர் திருச்சி என்.சிவா, வழக்கறிஞர் அருள்மொழி, மதிமாறன், ஈரோடுசத்யவதி, கோவை க.நாகநந்தினி ஆகியோர் வாழ்த்துரையாற்றினார்கள். தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., துணைமேயர் மு.மகேஷ்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் ச.அரவிந்தரமேஷ், ஏஎம்வி. பிரபாகர்ராஜா, காரம்பாக்கம் க.கணபதி, மாவட்ட கழக நிர்வாகிகள் எஸ்.குணசேகரன், பாலவாக்கம் த.விஸ்வநாதன் எம்.சி., பாலவாக்கம் மு.மனோகரன், பகுதி கழக செயலாளர்கள் கே.கண்ணன், நொளம்பூர் வே.ராஜன், பொதுக்குழு உறுப்பினர்கள் சைதை சம்பத், மின்னல் கந்தப்பன், எஸ்.அரிகிருஷ்ணன், மாவட்ட அமைப்பாளர்கள் எம்.எஸ்.ஹரிபாபு, ந.மணிகண்டன், அஞ்சல்ராமன், கோ.பாஸ்கர், ப.அருண்குமார், இளைஞர் அணியின் நிர்வாகிகள் ஆர்.கிருஷ்ணகுமார், கோட்டூர் எஸ்.பிரகாஷ், வட்ட கழக செயலாளர்கள் த.மோகன்குமார் எம்.சி., சை.மு.சேகர், ந.தமிழரசு, அட்கோ கமலநாதன், ஆகியோர் கலந்துகொண்டனர். நிறைவாக வட்ட கழக செயலாளர்கள் எம்.நாகா, எஸ்.பி.கோதண்டம் நன்றி கூறினார்கள்.

## அரசு விழாக்களில் வரம்பை மீறி அரசியல் பேசுகிறார்!

# பிரதமர் மோடி பேசுவது அரசியல் ஆதாயமே என்பதில் சந்தேகமில்லை!

## "தினகரன்" நாளேடு தலையங்கத்தில் விமர்சனம்!

சென்னை, மார்ச் 5 –

அரசு விழாக்களில் அரசியல் பேசக் கூடாது என்ற வரம்பை மீறி பட்டவர்த்தனமாக மோடி அரசியல் பேசுவது அரசியல் ஆதாயமே என்பதில் சந்தேகமில்லை என "தினகரன்" நாளேடு தலையங்கம் வெளியிட் டுள்ளது.

அது வருமாறு:



தினகரன்

மார்ச் 4, 2024 திங்கள் கிழமை

ஆதாய அரசியல்

தேர்தல் வந்துவிட்டாலே பிரதமர் மோடிக்கு மக்கள் ஞாபகம் வந்துவிடும். விமானத்திலும், ஹெலிகாப்டரிலும் பறந்து, பறந்து வந்து மக்களை நேரில் சந்தித்துவிட்டு, தனக்கே உரித்தான ஏற்ற இறக்க உரை வீச்சுகளை நிகழ்த்தி விட்டு போவார். வாக்காளர்கள் அப்போது அவருக்கு தெய்வமாக தெரிவர். பலமான மாநிலங்கள், பலவீனமான மாநிலங்கள் என்பதையெல்லாம் தோராயமாக கணக்கிட்டு கூட்டணிகளை உடைத்தல், இணைத்தல், காங்கிரசை பலவீனப்படுத்துதல் போன்றவை எல்லாம் அவர் சார்ந்த பாஜவுக்கு கை வந்த கலை. [illegible]

தேர்தல் வந்துவிட்டாலே பிரதமர் மோடிக்கு மக்கள் ஞாபகம் வந்துவிடும். விமானத்திலும், ஹெலிகாப்டரிலும் பறந்து, பறந்து வந்து மக்களை நேரில் சந்தித்துவிட்டு, தனக்கே உரித்தான ஏற்ற இறக்க உரை வீச்சுகளை நிகழ்த்தி விட்டு போவார். வாக்காளர்கள் அப்போது அவருக்கு தெய்வமாக தெரிவர். பலமான மாநிலங்கள், பலவீனமான மாநிலங்கள் என்பதையெல்லாம் தோராயமாக கணக்கிட்டு கூட்டணிகளை உடைத்தல், இணைத்தல், காங்கிரசை பலவீனப்படுத்துதல் போன்றவை எல்லாம் அவர் சார்ந்த பா.ஜ.வுக்கு கை வந்த கலை.

மூன்றாவது முறையாக பிரதமராக துடிக்கும் மோடியின் வலையில் தமிழ்நாட்டில் இருந்தும் ஏதாவது மீன்கள் சிக்காதா என்கிற கணக்கு, அடிக்கடி மனக்கண்ணில் தோன்றி மறைகிறது. விளைவு தமிழ்நாட்டுக்கு இப்போது அடிக்கடி வந்து செல்கிறார்.

நீட் தேர்வு தொடங்கி, பணமதிப்பிழப்பு என ஒன்றிய அரசின் பல்வேறு திட்டங்களால் தமிழகத்தின் எதிர்காலம் பாதிக்கப்பட்டது. தமிழ்நாட்டின் வரி வருவாய் அனைத்தையும் ஜிஎஸ்டி என்கிற பெயரால் மூட்டை, மூட்டையாய் கொண்டு சென்றவர்கள், பின்னாளில் நெல்லிக்காய் அளவுக்கு திருப்பி தந்துவிட்டு நீலிக் கண்ணீர் வடித்தார்கள்.

10 ஆண்டுகளில் இந்திக்கும், சமஸ்கிருதத்திற்கும் நிதியை வாரி வழங்கிவிட்டு, இப்போது தமிழ் மொழி மீது ஈடுபாட்டோடு, தமிழ் வளர்ச்சி குறித்து பொதுக்கூட்ட மேடைகளில் பிரதமரும், ஒன்றிய அமைச்சர்களும் நாவினிக்க பேசுகின்றனர். இந்த மாயங்களுக்கு எல்லாம் காரணம் நாடாளுமன்ற தேர்தல் விரைவில் வர இருப்பதுதான்.

இத்தேர்தலுக்காக தமிழ்நாட்டில் தி.மு.க., அதிமுக கட்சிகள் எல்லாம் கூட்டணி பேச்சுவார்த்தையில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றன. பாஜவுக்கோ இன்னமும் கூட்டணி தமிழகத்தில் உருப்படியாக அமையவில்லை.

தமாகா, புதிய நீதிகட்சி, ஐஜேகே, தமமுக உள்ளிட்ட சிறு, சிறு கட்சிகளே பாஜ கூட்டணிக்கு பச்சைக்கொடி காட்டியுள்ளன. பாமக, தேமுதிக உள்ளிட்ட கட்சிகள் கூட பாஜ கூட்டணி என்கிற படுகுழியில் விழ தயாரில்லை. ஓபிஎஸ், டிடிவி தினகரன் போன்றோரும் இன்னமும் முடிவு எடுத்தபாடில்லை. இந்த சூழலில் பாஜவுக்கு வாக்கு வங்கியை உருவாக்கிட பிரதமர் மோடி சூறாவளியாக சுழன்று வாக்கு சேகரித்து வருகிறார்.

கடந்த 27 மற்றும் 28ம் தேதிகளில் தமிழகம் வந்த மோடி, இரு தினங்கள் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்றார்.

திருப்பூர் மாவட்டம் பல்லடம், தூத்துக்குடி, நெல்லை மாவட்டம் பாளையங்கோட்டை ஆகியவற்றில் பொதுக்கூட்டம் நடத்தி, பாஜ அரசின் சாதனைகளை கூறியதோடு, எதிர்க்கட்சிகளை எல்லாம் வாய் புளித்ததோ, மாங்காய் புளித்ததோ என சாடிவிட்டு சென்றார். இங்கு வந்து சென்ற 5 நாட்களுக்குள் மீண்டும் இன்று அவர் சென்னைக்கு வந்து கல்பாக்கம் அணுஉலை மேம்பாடுகளை பார்வையிடுவதோடு, நந்தனம் பொதுக்கூட்டத்திலும் பங்கேற்கிறார்.

நாடாளுமன்றத் தேர்தல் விரைவில் வரவுள்ள நிலையில், வாரம்தோறும் பிரதமர் மோடி தமிழகத்திற்கு விஜயம் தருவது பொதுமக்களை ஆச்சரியத்தில் ஆழ்த்துகிறது.

கடந்த டிசம்பர் மாதம் இதே சென்னையும், நெல்லை, தூத்துக்குடியும் வெள்ளத்தில் மூழ்கியபோது, பிரதமர் மோடியின் ஹெலிகாப்டரை பொதுமக்கள் தேடிக் கொண்டிருந்தனர். அப்போது பிரதமர் எங்கு சென்றார் என்றே தெரியவில்லை. 2 ஒன்றிய அமைச்சர்கள் மட்டும் வந்து சென்ற நிலையில் வெள்ள நிவாரண நிதியாக தமிழகத்திற்கு ரூ.1 கூட இதுவரை தரவில்லை. இப்போது பொதுக் கூட்டங்களிலும், அரசியல் பேசக்கூடாது என்கிற வரம்பை மீறி அரசு விழாக்களிலும் கூட பிரதமர் பட்டவர்த்தனமாக அரசியல் பேசுவது அரசியல் ஆதாயமே என்பதில் சந்தேகமே இல்லை.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## நாடாளுமன்றத் தேர்தலில் – தி.மு.க. தலைமையிலான 'இந்தியா' கூட்டணிக்கு

# அகில இந்திய வல்லரசு பார்வர்டு பிளாக் ஆதரவு!

## பி.என்.அம்மாசி அறிவிப்பு!

மதுரை, மார்ச் 5-

அகில இந்திய வல்லரசு பார்வர்டு பிளாக் மாநில செயற்குழுக் கூட்டம் 28.02.2024 அன்று மதுரை தானப்பமுதலி தெரு, நியூ ராஜா ரெஸ்ட் ஹவுசில் அகில இந்திய வல்லரசு பார்வர்டு பிளாக் நிறுவனர் தலைவர் பி.என்.அம்மாசி தலைமையில் நடைபெற்றது. பா.சந்திரசேகரன் தீர்மானங் களை வாசித்தார்.

எதிர்வரும் நாடாளு மன்றத் தேர்தலில் தி.மு.க. தலைமையிலான "இந்தியா கூட்டணி" 40 இடங்களிலும் வெற்றிபெற அயராது பாடுபட்டு பாசிசத்தை வீழ்த்தி ஜனநாயகம் வென்றிட தோழமைக் கட்சியான வல்லரசு பார்வர்டு பிளாக் தீர்மானிக்கிறது.

தென் மாவட்டங்களில் மதுரை, தேனி வாய்ப்புள்ள இடங்களில் வல்லரசு பார்வர்டு பிளாக் கட்சிக்கு ஓரிடம் ஒதுக்க வேண்டுமென தோழமைக் கட்சியான தி.மு.க.வை கேட்டுக்கொள்கிறோம்.

தமிழ்நாட்டில் திராவிட மாடல் அரசை சிறப்புடன் நடத்தி வரும் தி.மு.க. தலைவரும், முதல் அமைச்சருமான தளபதி முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் சென்னை கடற்கரையில் தி.மு.க.வை தோற்றுவித்த பேரறிஞர் அண்ணா நினைவிடம், அண்ணாவழியில் அயராது உழைத்த முத்தமிழறிஞர் கலைஞர் நினைவகம் மிகச் சிறப்பாகக் கட்டி 26.02.2024ல் திறந்து வைத்ததை வரவேற்று பாராட்டி மகிழ்ச்சி தெரிவிக்கிறோம்.

தமிழ்நாடு வந்து பொய்ப் பிரச்சாரம் செய்யும் பி.ஜே.பி. மோடியின் வாய் வளர்ச்சி பொய்யான நம்பிக்கை பாசம் காட்டுவது போல் தமிழக மக்களை மோசம் செய்வது, 10 ஆண்டுகளாக ஆட்சியில் வேலை வாய்ப்பு தராதது, பேரிடர் வெள்ள நிவாரண நிதியில் ஒரு காசு கூட தராமல் வாய்ப்பறை கொட்டும் பி.ஜே.பி.யை உடனடியாக அகற்றவும் மதுரைக்கு எய்ம்ஸ் மருத்துவ மனை அமைக்காமல் பேசுவதை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

மாநிலக்குழு உறுப்பினர்கள் மதுரை ஆண்டாள்புரம் பாண்டி, உசிலை ராஜாங்கம், சுருளி, உசிலை அழகாத்தேவன், ஆர்.ரவி, கணேசன், தேனி முத்து, மருது மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

விக்கிரமங்கலம் க.மாயத்தேவர் நன்றி கூறினார்.

## முதல்வர் பிறந்த நாள்: எல்.ஆரோக்கியராஜ் தலைமையில்

# 169 -வது வட்டத்தில் கொடியேற்றி உணவு!

## துணை மேயர் மு.மகேஷ்குமார் வழங்கினார்!

சென்னை, மார்ச் 5 -

சைதை கிழக்கு பகுதி 169 வட்டத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் மு.மகேஷ் குமார் கீழ்கண்ட இடங்களில் உணவு வழங்கினார். வட்ட கழக அலுவலகத்தில் வட்டச் செயலாளர் எல்.ஆரோக்கியராஜ் ஏற்பாட்டில் அறுசவை உணவும், ரங்கராஜபுரத்தில் வட்டத் துணைச் செயலாளர் மு. சந்திரா ஏற்பாட்டில்அறுசுவை உணவு வழங்கப்பட்டது. வெங்கடாபுரம் நுழைவாயிலில் வட்ட துணை செயலாளர் துரை சரவணன் ஏற்பாட்டில்கொடியேற்றி இனிப்பு வழங்கப்பட்டது . பகுதி பிரதிநிதி ஆ. பரணி ஏற்பாட்டில் கொடியேற்றி இனிப்பு வழங்கப்பட்டது

கலைஞர் பொதுப்பணி மன்றத்தில் பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் ப. அருண் ஏற்பாட்டில் அறுசுவை உணவு வழங்கப்பட்டது பகுதி அமைப்பாளர் அ.தமிழரசன்ஏற்பாட்டில் கழக கொடியேற்றி இனிப்பு வழங்கப்பட்டது

இந்நிகழ்வில் பகுதி துணை செயலாளர் மு. ஆரோக்கியம் மாவட்ட பிரதிநிதி இரா.சுதா பிரியன் அவை தலைவர் அ.ஆரி, துணைச் செயலாளர் இரா. தமிழ்வாணன், பொருளாளர் சைதை ஆ.விக்டர்,

பகுதி பிரதிநிதிகள் மை.அருள்ராஜ், வி.என். செல்வமணி, சூரியன் பிரபு மற்றும் எ.கௌதமன் ஈ.மதனசேக ரன்,பென்னி கிளமென்ட், ரஷித், கே.செந்தில், ரிச்சர்ட்சன், சின்னா, மேகநாதன், வெ.சத்திய நாராயனண், ஆட்டோ தேவன், ஜெ.கே.தவமணி, ஜெயசிம்மன்சரத், வீடியோ சரவணன், சத்யாநகர் சிவா, மணிமுத்து, பி.டி.சி. ஜெயராமன், ந.மதியழகன், மேஷாக், வி.சுரேந்திரன் பாரதி, மணி. சந்துரு, கலைவாணன், வினோத், மார்பி, ராஜேந்திரி, வசந்தி,மேரி வின்சென்ட், சமியுல்லா, ஜெகன், ஏழுமலை, முருகன்,ஏசுதாஸ் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.




திருவள்ளூர் மத்திய மாவட்டம் திருவேற்காடு நகர திமுக சார்பில் எல்லோருக்கும் எல்லாம் திராவிட மாடல் நாயகரின் பிறந்த நாள் விழா மற்றும் நிதிநிலை அறிக்கை விளக்கம் மாபெரும் பொதுக்கூட்டம் நகரச் செயலாளர் என்.இ.கே.மூர்த்தி தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட கழகச் செயலாளர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ. தலைமை கழக பேச்சாளர் கவிஞர் மனுஷ்யபுத்திரன் ஆகியோர் நிதிநிலை அறிக்கை குறித்து சிறப்புரையாற்றினார்கள். உடன் இளைஞர் அணி துணைச் செயலாளர் பிரபுகஜேந்திரன், நிர்வாகிகள் கே.ஜெ.ரமேஷ், சி.ஜெரால்டு, எஸ்.ஜெயபாலன், காயத்திரி ஸ்ரீதர், ஜி.ராஜேந்திரன், காஞ்சனா சுதாகர், சன்பிராகஷ், தி.வை.இரவி, ப.ச.கமலேஷ், ஜி.நாராயண பிரசாத், ஏ.ஜெ.பவுல், கே.சுரேஷ்குமார், அக்னி ராஜேஷ், எஸ்.சங்கர், அ.க.நடராஜன், பானு அரசு, ஜெ.சரவணன், செல்லதுரை, பி.பாண்டுரங்கன், ஒ.ஆர்.நாகூர்கனி, ஜேக்கப், ஜி.சி.சி.கருணாநிதி, பிரியாகுமார், டி.வி.இளங்கோவன், ஜி.சத்தியகிரி, எம்.காந்தி, பரிசமுத்து, பொன்.மனோகரன், என்.ராஜி, பா.பன்னீர்செல்வம், டி.குமார், பி.உமாபதி துரைகோபால், கே.பி.எஸ்.சுதாகர், பிரதானம், ஏ.சி.தெய்வசிகாமணி, தங்கதுரை, பி.வி.கே.கண்ணன், க.சாது, பி.ஜெகன், அ.குருநாதன், பேபிஸ்ரீ, அமலேஸ்வரி, நாராயணன், நரேஷ், உள்பட பலர் உள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

# அன்பில் தர்மலிங்கம்

## மார்ச் 5 (1993)



நீதிக்கட்சி, சுயமரியாதை இயக்கம், திராவிடர் கழகம் ஆகிய இயக்கங்களில் பங்கு கொண்டதன்றி தி.மு.க. உருவானபோது கழகத்தில் முக்கிய பங்கேற்று பணியாற்றினார்.

1938ஆம் ஆண்டு நடைபெற்ற முதல் இந்தி எதிர்ப்பு போராட்டம், மும்முனைப் போராட்டம் உள்ளிட்ட அறப்போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

திருச்சி மாவட்டச் செயலாளராக 1950 முதல் 1972 வரை பணியாற்றினார்.

திருச்சி மாவட்டத்தில் 1956ஆம் ஆண்டு நடைபெற்ற தி.மு.க. 2வது மாநில மாநாட்டின் வரவேற்புக்குழுத் தலைவராக பணியாற்றியவர்.

மாநாட்டிற்கு கழகத்தவரை அண்ணா வருமாறு அழைப்பு விடுக்கும்போது அதற்காக திராவிட நாடு இதழில் எழுதிய தம்பிக்கு மடலில் "அன்பில் அழைக்கிறார்" என்றே தலைப்பிட்டு எழுதினார்.

சட்டமன்ற உறுப்பினராகவும், தலைவர் கலைஞர் அமைச்சரவையில் வேளாண்மைத் துறை மற்றும் வருவாய்த் துறை அமைச்சராகவும் பணியாற்றினார்.

தலைமைக் கழகச் சார்பில் தலைவர் கலைஞர் அவர்கள் 1986ஆம் ஆண்டு "பெரியார் விருது" வழங்கி சிறப்பித்தார்.

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**